செ.வெ.எண்.110 நாள்: 30.07.2019

தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்கள் பிறந்தநாளையொட்டி மருத்துவமனை தினம் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

---

தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்கள் பிறந்தநாளை முன்னிட்டு மருத்துவமனை தினம் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (30.07.2019) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கலந்துகொண்டு குத்துவிளக்கு ஏற்றிவைத்தார். மேலும் சிறப்பாக பணியாற்றிய 10 மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார். மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் விருப்புரிமை நிதியில் இருந்து சுமார் ரூ.10 லட்சம் மதிப்பில் தூத்துக்குடி அரசு மருத்துவமனை பயன்பாட்டிற்கு புதிதாக வாங்கப்பட்ட மருத்துவ உபகரணங்களை பார்வையிட்டார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுப்படி, ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 30ம் தேதி டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி அவர்கள் பிறந்தநாளை மருத்துவமனை தினமாக கொண்டாட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இன்று நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து மருத்துவமனைகளிலும் மருத்துவமனை தினம் நிகழ்ச்சி கொண்டாடப்பட்டு வருகிறது. இன்று நடைபெறும் மருத்துவமனை தினத்தில் சுகாதார துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் அரசின் திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்கள் பயனடையச் செய்து, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வழங்கப்பட்டு வரும் நவீன மருத்துவ சிகிச்சைகள் குறித்து பொதுமக்களுக்கு தெரியப்படுத்துதல், மேலும், பொதுமக்கள் நேரடியாக மருத்துவர்களை அணுகி அவர்களுக்கு தேவையான ஆலோசனைகள் பெறுதல் உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், இந்நாளில் சிறப்பாக பணியாற்றிய மருத்துவர்கள், செவிலியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கி அவர்களை ஊக்குவிக்கப்படுகிறது. தூத்துக்குடியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) அவர்கள் தலைமையிலும், கோவில்பட்டியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் கோவில்பட்டியில் துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) அவர்கள் தலைமையிலும் மருத்துவமனை தினம் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதேபோல் ஒவ்வொரு ஆண்டும் இந்நிகழ்ச்சி தமிழக அரசின் உத்தரவுப்படி சிறப்பாக நடைபெறும். மேலும் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சமூக பொறுப்பு நிதி மற்றும் அரசு நிதியுடன் ரூ.2 கோடி மதிப்பில் புற்றுநோய் பிரிவு அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.தூத்துக்குடி மருத்துவ கல்லூரி LAQSHAYA சான்றிதழ்கள் பெற இணைக்கப்பட்டுள்ளது. இந்த சான்றிதழ்கள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு தேவையான நடவடிக்கைகள் மருத்துவ கல்லூரி மூலம் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் பொதுமக்களுக்கு தேவையான நவீன சிகிச்சைகள் அளிக்கும் வகையில் புதிய கருவிகள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் 12 கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு நடத்தப்பட்டதை பார்வையிட்டார்.

நிகழ்ச்சியில் தூத்துக்குடி அரசு மருத்துவமனை முதல்வர் டாக்டர்.ராமசுப்பிரமணியன், உறைவிட மருத்துவர்.சைலேஸ், தாய் சேய் நலப்பிரிவு டாக்டர்.மெர்சிரொட்ரிகோ, மருத்துவ பிரிவு துறை தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.